# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**<u>OS.No.7/2016</u>**

PW1–இந்திராணி நாள்.09.03.2026

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சட்டரீதியாக கிடைக்கக்கூடிய பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்கணவருக்குண்டான 5ல் ஒரு பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்மாமனாருக்கு சொந்தமான ஏ அட்டவணை சொத்தில் அயிட்டம் 1ல் கண்ட சொத்துக்களை என்மாமனார் ஏற்கனவே பாகம் பிரித்து கொடுத்துவிட்டதாகவும், மீதியுள்ள சொத்துக்களில் 5ல் 1பாகம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஏ அட்டவணை சொத்தில் நான் பாகம் கேட்கவில்லை. 1ம் பிரதிவாதி என்தாயார். 2, 4ம் பிரதிவாதிகள் என்தாய்மாமன்கள். இந்த உறவுமுறையை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நானும், என்அம்மாவும் சேர்ந்து மற்ற 4ம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்ததால் தான் உறவுமுறையை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்கணவர் கிருஷ்ணமூர்த்தி என்தாய்மாமன் தான். உறவுமுறையை வேண்டுமென்றே மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பெரியசாமிகவுண்டருக்கு அலமேலு, மாரியப்பன், சுசீலா, வெங்கடாஜலபதி, கிருஷ்ணமூர்த்தி ஆகிய 5குழந்தைகள் என்றால் சரிதான். மேற்படி மாரியப்பனுக்கு இரண்டு கண்களும் சிறுவயது முதல் தெரியாது என்றால் சரிதான். மற்ற 4பேர்களுக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் கையெழுத்து போடுவார்கள், ஓரளவுக்கு படிக்க தெரியும். 4ம் பிரதிவாதிக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரியல்ல. என்அம்மாவழி தாத்தா பெரியசாமி இறப்பதற்கு முன்பே என்கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் B.Pharm படித்துவிட்டு LLB முடித்துள்ளேன். என் கணவர் குடும்பத்தில் நான்தான் முதல்பட்டதாரி என்றால் சரிதான். என்தாத்தா பெரியசாமி தான் என்னை B.Pharm படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. பெரியசாமிகவுண்டருக்கு நான் மகள் வழிபேத்தி என்பதாலும், அவருக்கு இளையமகனின் மனைவி என்பதாலும் நான்

அதிக உரிமையுடன் பெரியசாமிகவுண்டர் வீட்டிற்கு போய் வருவேன் என்றால் சரியல்ல. அம்மாதிரி போகும்சமயங்களில் பெரியசாமி மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு தெரியாமல் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. பெரியசாமிக்கு முதலில் பக்கவாதமானது 14.04.2014 அன்று ஏற்பட்டது என்றால் சரிதான். அவருக்கு முதலில் பெரம்பலூர் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தும், அதன்பின்பு திருச்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றும், பின்பு சென்னையுள்ள அப்போலோ மருத்துவமனையிலும் சிகிச்சையில் சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். அவர் சென்னையில் சிகிச்சையில் இருக்கும்போது நான் சென்னையில் ஏரிக்கரை சாலையில் குடியிருந்தேன் என்றால் சரிதான். அவர் திருச்சியில் சிகிச்சையில் இருக்கும்போது நான் பார்த்துகொள்கிறேன் என்று கூறி அவரை சென்னை மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன் என்றால் சரியல்ல. திருச்சியில் சரியான சிகிச்சை அளிக்காததால் தான் சென்னைக்கு அழைத்து சென்றேன். அவர் 14.02.2014ம் தேதி பெரம்பலூர் பாண்டியன் கிராம வங்கியில் ரூ.50ஆயிரத்துக்கும் மற்றும் ரூ.75ஆயிரத்துக்கும் நகைகடன் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவர் பாண்டியன் கிராமவங்கியில் நகைகடன் பெற்றுள்ளார் என்று நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் வா.சா.ஆ.13 ஆவணம் நகைக்கடன் சம்மந்தமாக தாக்கல் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அது அவர் வைத்திருந்த ஆவணமாகும். 14.02.2014ம் தேதி குடும்பத்திற்கு சுபகாரியங்களுக்கோ அல்லது கெட்டகாரியங்களுக்கோ பெரியசாமி செலவுசெய்யவேண்டிய சூழ்நிலை கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 14.02.2014ம் தேதி குடும்பத்தில் எந்த சுப மற்றும் துக்க நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை என்றால் நான் சென்னையில் வேலையில் இருந்ததாலும், விதவையாக இருப்பதாலும், அந்த விவரம் தெரியாது. நான் அம்மாதிரியான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது கிடையாது. 14.02.2014ம் தேதி என்தாத்தா நகைக்கடன் மூலம் பெற்ற பணத்தை வைத்து தான் பெரம்பலூர், திருச்சி மற்றும் சென்னையில் நான் சிகிச்சை

அளித்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2, 4 பிரதிவாதிகளுக்கு நான் அறிவிப்பு அனுப்பினேன். என்அம்மா மற்றும் சுசீலாவுக்கு அந்த அறிவிப்பை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.17 அறிவிப்பை என் வழக்கறிஞர் மூலம் நான் அனுப்பினேன். வா.சா.ஆ.17 அறிவிப்பை 2, 4 பிரதிவாதிகளுக்காக வேறு பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை என்றால் மற்ற பிரதிவாதிகள் பெயர் இல்லை. அறிவிப்பு அனுப்ப வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் சொன்னேன். என்அம்மா மற்றும் சுசீலாவுக்கு அறிவிப்பு அனுப்பாததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் 2, 4 பிரதிவாதிகள் தான் எனக்கு கொடுக்க வேண்டிய பாகத்தை கொடுக்கவிடாமல் செய்தார்கள். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் சொன்னேன். நிருபணவாக்குமூலம் தயார் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் சொன்னேன். அவற்றில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் பெரியசாமிகவுண்டருக்கு சிகிச்சை அளிப்பதற்காக என்அம்மா அவர்களுக்கு தெரிந்த 3ம் நபர்களிடம் ரூ.2,85,000/- கடன் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் அம்மாதிரி அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 5வது பத்தியில் நான் ரூ.2,85,000/- கடன் பெற்று சிகிச்சைக்கு செலவழித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் என் நண்பர்களிடம் ரூ.2,85,000/- கடன் பெற்று சிகிச்சைக்கு செலவழித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்அம்மாவும், நானும் ரூ.2,85,000/- கடன் வாங்கினோம் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணம் என்னிடம் இல்லை. அவசரத்திற்காக கடன் வாங்கினேன். அறிவிப்பிலோ, பிராதிலே, நிருபணவாக்குமூலத்திலோ யாரிடம் கடன் வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் . நானோ, என்அம்மாவோ கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றால்

சரியல்ல. நான் உண்மையில் கடன் வாங்கியிருந்தால் அதுசம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும், வாங்கிய நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு கிடைக்கக்கூடிய பாகத்தில் அதிகப்படியான ஆதாயம் அடையவேண்டும் என்பதற்காக அவ்வாறு பொய்யாக காரணங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எதிர்வழக்குரையில் பாகம் பிரித்து கொடுக்க தான் தயாராக இருப்பதாக 4ம் பிரதிவாதி கூறியுள்ளார் என்றால் அவ்வாறு அவர் தயாராக இருந்திருந்தால் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கமாட்டேன். 4ம் பிரதிவாதி பாகம் பிரித்து கொடுக்க தயாராக இருந்தார் என்றும், நான் வீணாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் 4ம் பிரதிவாதி சட்டப்படி எனக்குரிய பாகத்தை கொடுக்க தயாராக இருக்கிறார் என்றால் அவர் தான் சொத்தை கைவசம் வைத்து கொண்டு வருமானம் ஈட்டி வருகிறார். 4ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சொத்தில் வருமானத்தை அடையவில்லை என்றால் சரியல்ல. என்அம்மாவின் திருமண சமயத்தில் என்கணவருக்கு சுமார் 1 1/2 வயது என்றால் தெரியாது. என்அம்மாவுக்கும், சுசீலாவுக்கும் சுமார் 40 வருடங்களுக்கு முன்பே திருமணாகிவிட்டதால் இந்து கூட்டுகுடும்ப சொத்தில் அவர்களுக்கு பாகம் கிடையாது என்றால் சரியல்ல. திருமண சமயத்தில் என்அம்மாவுக்கும், சுசிலாவுக்கும் வேண்டிய சீர்வரிசைகளை என்தாத்தா செய்துவிட்டதால் பொதுகுடும்ப சொத்தில் அவர் பாகம் தர விரும்பவில்லை என்றால் சரியல்ல. 27.05.2009ம் தேதி பெரியசாமிகவுண்டர் 2, 4ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதிமகனுக்காக ஒருஉயில் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. அந்த ஆவணத்தை நான் என்தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர் இறந்தபின்னர் அந்த ஆவணத்தை பற்றி தெரியவந்தது. ஆவணத்தில் உள்ள விவரங்களை நான் தெரிந்துகொண்டேன் என்றால் அவர் இறந்தபின்னர் தெரிந்தது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்அம்மா மற்றும் சுசீலாவுக்கு திருமண சமயத்தில் சகலவிதமான சீர்வரிசைகளும்

செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்அம்மா மற்றும் சுசீலாவை இந்த வழக்கில் தவறாக தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விவரம் தெரிந்து தான் அவர்களுக்கு நான்அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வங்கியில் உள்ள பணம் மற்றும் நகைகளிலும் நான் பாகம் கேட்டுள்ளேன். வங்கியில் உள்ள பணம் மற்றும் நகை சம்மந்தமாக நீதிமன்றத்தில் வாரிசு சான்றிதழ்கேட்டு தான் மனு செய்யவேண்டும் என்றும், பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. பெரியசாமிகவுண்டருக்கு நான் வாரிசு சான்று பெற்றுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அது தற்போது என்கைவசம் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக இருக்கிறேன். நான் இதுவரை வாரிசுசான்று வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.